உ

சிவமயம்



பதுளை இந்து வாலிபர் சங்கம் வெளியீடு

# நவராத்திரிப் பாமாலை

1966

அச்சிட்டோர்: மொடர்ன் அச்சகம் - பதுளை

Digitized by Noolaham Foundation
noolaham.org | aavanaham.org

# பதிப்புரை

அகில உலகிலுக் வாழ்கின்ற இந்துக்களின் வீடுகளிலும், பாடசாலைகளிலும், கோவில்களிலும், தொழில் நிலையங்களிலும், சங்கங்களிலும் தவறுது கொண்டாடப்படுகின்ற பண்டிகைகளிலே நவராத்திரிப் பண்டிகையே தலையாயது எனின் மிகையன்று.

மானிடர் வாழ்வில் வீரம், செல்வக், கல்வி மூன்றும் இன்றி யமையாதவையாகும். புரட்டாதி மாதத்தின் சுக்கிலபட்சத்து முதல் நாள் இரவு தொடங்கித் தொடர்ந்து வருகின்ற மும்மூன்று இரவு களிலும் முறையே துர்க்கை (பராசக்தி), இலக்குமி, சரஸ்வதி முத லாம் தெய்வங்களை வணங்கி வீரம், செல்வம், கல்வி ஆதியாம் இஷ்டசித்திகளை இந்துக்கள் பெற்றுய்வர்.

சரஸ்வதி பூசையின் மூன்ரும் (இறுதி) நாளில் மாணவர் தொடக்கம் தொழிலாளர், வர்த்தகர்கள் முதலாம் இந்துக்கள் யாவரும் தமது தொழிலுக்கேற்ப, தத்தமது உபகரணங்களைத் தேவி முன் வைத்துப் பூசையிட்டுப் பிரார்த்தித்து வணங்குவர்.

மிக அண்மையில் ஸ்தாபிக்கப்பட்ட பதுளை இந்து வாலிபர் சங்கம் சைவத்துறையில் பணியாற்றி, பாடசாலைச் சிருரிடையே யும், மக்களிடையேயும் சைவநெறியைப் பரப்புவதில் ஊக்கமும் ஆக் கமும் கொண்டுள்ளது. சங்கத்தின் தொடர் முயற்சிகளுள் "நவராத்திரிப் பாடல்கள்" வெளியீடும் ஒன்ருகும். சிவநேயச் செல் வர்கள் யாவரும் பிரார்த்தனைக்குரிய பாடற்பதிப்பைப் பெற்றுப் பிரார்த்திக்க உதவி புரியும் நோக்குடனேயே இப்பதிப்பு வெளியிடப் படுகின்றது.

சங்கத்தின் ஆரம்ப வெளியீடும் இதுவேயாகும். இப்பதிப்பில் தவறுதல்கள் நேர்ந்திருந்தால், அன்பர்கள் அவற்றை எடுத்து விளக்கினல், எமது அடுத்த வெளியீடுகளை சீரியமுறையில் வெளி யிட முயல்வோம்.

எமது பொதுப்பணி, மேன்மேலும் சிறப்புற்ருேங்க, பொது மக்களாகிய தங்கள் அனைவோரின் ஆதரவையும் அன்பையும் வேண்டுகின்ருேம்.

இவ்வாரம்ப வெளியீட்டிற்கு முன்னின்று ஊக்கமும் உதவி யும் அளித்த அன்பர்களுக்கு எமது நன்றியைத் தெரிவிக்கின்ருேம்.

இந்து வாலிபர் சங்கம்—பதுளை

146, லோவர் வீதி,
பதுளை. 1.10.1965

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

உ
சிவமயம்

# தேவாரம்

பிடியதன் உருவுமை கொளமிகு கரியது
வடிகொடு தனதடி வழிபடும் அவர் இடர்
கடிகணபதிவர அருளினன் மிகு கொடை
வடிவினர் பயில்வலி வலமுறை இறையே.

திரைகழ லரவஞ் சிலம்பொலி யலம்பு
நிமலர் நீறணி திருமேனி
வரைகெழு மகளோர் பாகமாப் புணர்ந்த
வடிவினர் கொடியணி விடையர்
கரைகெழு சந்துங் காரகிற் பிளவு
மளப்பருங் கனமணி வரன்றிக்
குரைகடலோத நித்திலங் கொழிக்குங்
கோணமா மலையமர்ந் தாரே.

ஆயிரந் தாமரை போலும் ஆயிரஞ் சேவடி யானும்
ஆயிரம் பொன்வரைபோலும் ஆயிரந் தோளுடையானும்
ஆயிர ஞாயிறு போலும் ஆயிர நீண்முடி யானும்
ஆயிரம் பேருகந் தானும் ஆரூர் அமர்ந்த அம்மானே.

பேணியநற் பிறைதவழ்செஞ் சடையினனைப்
பித்தராம் அடியார்க்கு முத்திகாட்டும்
ஏணியை இடர்க்கடலுட் சுழிக்கப்பட்டு இங்கு
இளைக்கின்றேற்கு அக்கரைக்கே ஏறவாங்குந்
தோணியைத் தொண்டனேன் தூயசோதிச்
சுலாவெண் குழையானைச் சுடர்பொற்காசின்
ஆணியை ஆவடுதண் துறையுள் மேய
அரன் அடியே அடிநாயேன் அடைந்து உய்த்தேனே.

அங்கத்துறு நோய்களடி யார்மேலொழித் தருளி
வங்கம்மலி கின்றகடன் மாதோட்ட நன்னகரில்
பங்கஞ் செய்த மடவாளொடு பாலாவியின் கரைமேல்
தெங்கம் பொழில் சூழ்ந்த திருக் கேதீச்சரத்தானே.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# திருவாசகம்

## சிவபுராணம்

நமச்சிவாய வாழ்க நாதன்தாள் வாழ்க
இமைப்பொழுதும் என்னெஞ்சில் நீங்காதான் தாள்வாழ்க
கோகழி யாண்ட குருமணிதன் தாள்வாழ்க
ஆகம மாகிநின் றண்ணிப்பான் தாள்வாழ்க
ஏகன் அநேகன் இறைவன் அடிவாழ்க
வேகங் கெடுத்தாண்ட வேந்த னடிவெல்க
பிறப்பறுக்கும் பிஞ்ஞகன்றன் பெய்கழல்கள் வெல்க
புறத்தார்க்குச் சேயோன்றன் பூங்கழல்கள் வெல்க
கரங்குவிவார் உள்மகிழுங் கோன்கழல்கள் வெல்க
சிரங்குவிவார் ஓங்குவிக்குஞ் சீரோன் கழல்வெல்க
ஈசன் அடிபோற்றி யெந்தை அடிபோற்றி
தேசன் அடிபோற்றி சிவன்சே வடிபோற்றி
நேயத்தே நின்ற நிமல னடிபோற்றி
மாயப் பிறப்பறுக்கு மன்ன னடிபோற்றி
சீரார் பெருந்துறைநந் தேவ னடிபோற்றி
ஆராத இன்பம் அருளு மலைபோற்றி
சிவன் அவனென் சிந்தையுள் நின்ற அதனால்
அவனரு ளாலே அவன் தாள் வணங்கிச்
சிந்தை மகிழச் சிவபுரா ணந்தன்னை
முந்தை வினைமுழுதும் ஓய வுரைப்பனியான்
கண்ணுதலான் தன்கருணைக் கண்காட்ட வந்தெய்தி
எண்ணுதற் கெட்டா எழிலார் கழலிறைஞ்சி
விண்ணிறைந்து மண்ணிறைந்து மிக்காய் விளங்கொளியாய்
எண்ணிறந் தெல்லை யிலாதானே நின்பெருஞ்சீர்
பொல்லா வினையேன் புகழுமா றொன்றறியேன்
புல்லாகிப் பூடாய்ப் புழுவாய் மரமாகிப்
பல்விருக மாகிப் பறவையாய்ப் பாம்பாகிக்
கல்லாய் மனிதராய்ப் பேயாய்க் கணங்களாய்
வல்லசுர ராகி முனிவராய்த் தேவராய்ச்
செல்லாஅ நின்றஇத் தாவர சங்கமத்துள்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

எல்லாப் பிறப்பும் பிறந்திளைத்தே னெம்பெருமான்
மெய்யேயுன் பொன்னடிகள் கண்டின்று வீடுற்றேன்
உய்யஎன் னுள்ளத்துள் ஓங்கார மாய்நின்ற
மெய்யா விமலா விடைப்பாகா வேதங்கள்
ஐயா எனவோங்கி ஆழ்ந்தகன்ற நுண்ணியனே
வெய்யாய் தணியாய் இயமான னாம்விமலா
பொய்யா யினவெல்லாம் போயகல வந்தருளி
மெய்ஞ்ஞான மாகி மிளிர்கின்ற மெய்ச்சுடரே
எஞ்ஞானம் இல்லாதேன் இன்பப் பெருமானே
அஞ்ஞானந் தன்னை அகல்விக்கும் நல்லறிவே
ஆக்கம் அளவிறுதி யில்லாய் அனைத்துலகும்
ஆக்குவாய் காப்பாய் அழிப்பாய் அருள்தருவாய்
போக்குவா யென்னைப் புகுவிப்பாய் நின்றொழும்பின்
நாற்றத்தின் நேரியாய் சேயாய் நணியானே
மாற்ற மனங்கழிய நின்ற மறையோனே
கறந்தபால் கன்னலொடு நெய்கலந்தாற் போலச்
சிறந்தடியார் சிந்தனையுள் தேனூறி நின்று
பிறந்த பிறப்பறுக்கும் எங்கள் பெருமான்
நிறங்களோ ரைந்துடையாய் விண்ணோர்கள் ஏத்த
மறைந்திருந்தாய் எம்பெருமான் வல்வினையேன் தன்னை
மறைந்திட மூடிய மாய விருளை
அறம்பாவம் என்னும் அருங்கயிற்றாற் கட்டிப்
புறந்தோல் போர்த்தெங்கும் புழுவழுக்கு மூடி
மலஞ்சோரும் ஒன்பது வாயிற் குடிலை
மலங்கப் புலனைந்தும் வஞ்சனையைச் செய்ய
விலங்கு மனத்தால் விமலா உனக்குக்
கலந்தஅன் பாகிக் கசிந்துள் ளுருகும்
நலந்தான் இலாத சிறியேற்கு நல்கி
நிலந்தன்மேல் வந்தருளி நீள்கழல்கள் காட்டி
நாயிற் கடையாய்க் கிடந்த அடியேற்குத்
தாயிற் சிறந்த தயாவான தத்துவனே
மாசற்ற சோதி மலர்ந்த மலர்ச்சுடரே
தேசனே தேனா ரமுதே சிவபுரனே

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

பாசமாம் பற்றறுத்துப் பாரிக்கும் ஆரியனே
நேச அருள்புரிந்து நெஞ்சில்வஞ் சங்கெடப்
பேராது நின்ற பெருங்கருணைப் பேராறே
ஆரா வமுதே அளவிலாப் பெம்மானே
ஓராதா ருள்ளத் தொளிக்கும் ஒளியானே
நீரா யுருக்கியென் னாருயிராய் நின்றானே
இன்பமுந் துன்பமும் இல்லானே யுள்ளானே
அன்பருக் கன்பனே யாவையுமாய் அல்லையுமாஞ்
சோதியனே துன்னிருளே தோன்றாப் பெருமையனே
ஆதியனே அந்தம் நடுவாகி அல்லானே
ஈர்த்தென்னை யாட்கொண்ட எந்தை பெருமானே
கூர்த்தமெய்ஞ் ஞானத்தாற் கொண்டுணர்வார் தங்கருத்தின்
நோக்கரிய நோக்கே நுணுக்கரிய நுண்ணுணர்வே
போக்கும் வரவும் புணர்வுமிலாப் புண்ணியனே
காக்குமெங் காவலனே காண்பரிய பேரொளியே
ஆற்றின்ப வெள்ளமே யத்தா மிக்காய்நின்ற
தோற்றச் சுடரொளியாய்ச் சொல்லாத நுண்ணுணர்வாய்
மாற்றமாம் வையகத்தின் வெவ்வேறே வந்தறிவாந்
தேற்றனே தேற்றத் தெளிவேயென் சிந்தனையுள்
ஊற்றான வுண்ணா ரமுதே யுடையானே
வேற்று விகார விடக்குடம்பி னுட்கிடப்ப
ஆற்றேனெம் ஐயா அரனேஓ என்றென்று
போற்றிப் புகழ்ந்திருந்து பொய்கெட்டு மெய்யானார்
மீட்டிங்கு வந்து வினைப்பிறவி சாராமே
கள்ளப் புலக்குரம்பைக் கட்டழிக்க வல்லானே
நள்ளிருளில் நட்டம் பயின்றாடும் நாதனே
தில்லையுட் கூத்தனே தென்பாண்டி நாட்டானே
அல்லற் பிறவி யறுப்பானே யோவென்று
சொல்லற் கரியானைச் சொல்லித் திருவடிக்கீழ்ச்
சொல்லிய பாட்டின் பொருளுணர்ந்து சொல்லுவார்
செல்வர் சிவபுரத்தி னுள்ளார் சிவனடிக்கீழ்ப்
பல்லோரு மேத்தப் பணிந்து.

திருச்சிற்றம்பலம்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

வேண்டத் தக்க தறிவோய் நீ
வேண்ட முழுதுந் தருவோய் நீ
வேண்டும் அயன்மாற் கரியோய் நீ
வேண்டி என்னைப் பணிகொண்டாய்
வேண்டி நீயா தருள் செய்தாய்
யானும் அதுவே வேண்டின் அல்லால்
வேண்டும் பரிசொன்று உண்டென்னில்
அதுவும் உன்றன் விருப்பன்றே.

தேவர்கோ அறியாத தேவ தேவன்
செழும்பொழில்கள் பயந்துகாத் தழிக்குமற்றை
மூவர்கோ னாய்நின்ற முதல்வன் மூர்த்தி
மூதாதை மாதாளும் பாகத் தெந்தை
யாவன்கோன் என்னையும்வந் தாண்டு கொண்டான்
யாமார்க்குங் குடியல்லோம் யாதும் அஞ்சோம்
மேவினோம் அவன் அடியார் அடியாரோடு
மேல் மேலுங் குடைந்தாடி யாடுவோமே.

## திருவிசைப்பா

நீறணி பவளக் குன்றமே நின்ற
நெற்றிக் கண்ணுடையதோர் நெருப்பே
வேறணி புவனபோகமே யோக
வெள்ளமே மேருவில் வீரா
ஆறணி சடையெம் அற்புதக் கூத்தா
அம் பொன்செய் அம்பலத்தரசே
ஏறணி கொடியெம் மீசனே யுன்னைத்
தொண்டனேன் இசையுமா றிசையே.

ஒளிவளர் விளக்கே உலப்பிலா வொன்றே
உணர்வு சூழ் கடந்த தோருணர்வே
தெளிவளர் பளிங்கின் றிரள் மணிக்குன்றே
சித்தத்துள் தித்திக்குந் தேனே
அளிவளருள்ளத் தானந்தக் கனியே
அம்பலம் ஆடரங்காக
வெளிவளர் தெய்வக் கூத்துகந்தாயைத்
தொண்டனேன் விளம்புமா விளம்பே.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## திருப்பல்லாண்டு

சீருந் திருவும் பொலியச் சிவலோக நாயகன் சேவடிக்கீழ்
ஆரும் பெறாத அறிவு பெற்றேன் பெற்றதார் பெறுவா
ருலகில்
ஊரும் உலகுங் கழற உழறி உமைமண வாளனுக்காட்
பாரும் விசும்பும் அறியும் பரிசுநாம் பல்லாண்டு கூறுதுமே.

பாலுக்குப் பாலகன் வேண்டி யழுதிடப்
பாற்கட லீந்த பிரான்
மாலுக்குச் சக்கரம் அன்றருள் செய்தவன்
மன்னிய தில்லை தன்னுள்
ஆலிக்கும் அந்தணர் வாழ்கின்ற
சிற்றம்பலமே யிடமாகப்
பாலித்து நட்டம் பயில வல்லானுக்கே
பல்லாண்டு கூறுதுமே.

## திருப்புராணம்

சங்கரனே நின்பாதம் போற்றி போற்றி
சதாசிவனே நின்பாதம் போற்றி போற்றி
பொங்கரவா நின்பாதம் போற்றி போற்றி
புண்ணியனே நின்பாதம் போற்றி போற்றி
அங்கமலத் தயனோடு மாலுங் காணா
அனலுருவா நின்பாதம் போற்றி போற்றி
செங்கமலத் திருப்பாதம் போற்றி போற்றி
திருமூலட்டானனே போற்றி போற்றி.

பரமனை மதித்திடாப் பங்க யாசனன்
ஒருதலை கிள்ளியே ஒழிந்த வானவர்
குருதியும் அகந்தையுங் கொண்டு தண்டமுன்
புரிதரு வடுகனைப் போற்றி செய்குவாம்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## திருப்புகழ்

துள்ளுமத வேள்கைக் கணையாலே
தொல்லைநெடு நீலக் கடலாலே
மெள்ளவரு சோலைக் குயிலாலே
மெய்யுருகு மானைத் தழுவாயே
தெள்ளு தமிழ் பாடத் தெளிவோனே;
செய்யகும ரேசத் திறலோனே!
வள்ளல் தொழு ஞானக் கழலோனே!
வள்ளிமணவாளப் பெருமானே!

இறவாமற் பிறவாமல் எனையாள்சற் குருவாகிப்
பிறவாகித் திரமான பெருவாழ்வைத் தருவாயே
குறமாதைப் புணர்வோனே குகனேசற் குமரேசா
கறையானைக் கிளையோனே கதிர்காமப் பெருமானே.

## திரு அருட்பா

அருட்ஜோதித் தெய்வமெனை யாண்டுகொண்ட தெய்வம்
அம்பலத்தே ஆடுகின்ற ஆனந்தத் தெய்வம்
பொருட்சாரு மறைகளெலாம் போற்றுகின்ற தெய்வம்
போதாந்தத் தெய்வமுயர் நாதாந்தத் தெய்வம்
இருட்பாடு நீக்கியொளி ஈந்தருளுந் தெய்வம்
எண்ணியநா னெண்ணியவா றெனக்கருளுந் தெய்வம்
தெருட்பாட லுவந்தெனையுஞ் சிவமாக்குந் தெய்வம்
சிற்சபையில் விளங்குகின்ற தெய்வமதே தெய்வம்.

எல்லாஞ்செய் வல்லதெய்வம் எங்குநிறை தெய்வம்
என்னுயிரிற் கலந்தெனக்கே யின்பநல்குந் தெய்வம்
நல்லார்க்கு நல்லதெய்வம் நடுவான தெய்வம்
சிற்சபையி லாடுகின்ற நடராஜத் தெய்வம்
கல்லார்க்குங் கற்றவர்க்குங் களிப்பருளுந் தெய்வம்
காரணமாந் தெய்வமருட் பூரணமாந் தெய்வம்
செல்லாத நிலைகளெலாஞ் செல்லுகின்ற தெய்வம்
சிற்சபையில் விளங்குகின்ற தெய்வமதே தெய்வம்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# பராசக்தி வணக்கம்

இருபதமுந் துடியிடையுந் திகழுடையும்
தனதடமு மியல்பொற் பூணுங்
கருவிழியுஞ் செவ்வாயும் வெண்ணகையும்
பசுந்தோளுங் கழுநீர்க் கையும்
பொருவரு மங்கலநாணுங் கந்தரமும்
புரிகுழலும் புனிதன் கண்ணுந்
திருவருளு முலாவுமெழிற் சிவகாம
சுந்தரிதாள் சென்னி சேர்ப்போம்.

"பூரணி புராதனி சுமங்கலை சுதந்தரி
புராந்தகி த்ரியம்பகி யெழிற்
புங்கவி விளங்குசிவ சங்கரி சகஸ்ரதள
புட்பமிசை வீற்றிருக்கும்
நாரணி மனாதீத நாயகி குணாதீத
நாதாந்த சக்தி" என்றுன்
நாமமே யுச்சரித் திடுமடியர் நாமமே
நானுச்சரிக்க வசமோ?
ஆரணி சடைக்கடவு ளாரணி யெனப்புகழ
அகிலாண்ட கோடியீன்ற
அன்னையே பின்னையுங் கன்னியென மறைபேசும்
ஆனந்த ரூப மயிலே!
வாரணியு மிருகொங்கை மாதர்மகிழ் கங்கைசூழ்
வளமருவு தேவையரசே
வரைராச னுக்கிருகண் மணியா யுதித்த மலை
வளர்காத லிப்பெண் ணுமையே.

பெருந்தே னிறைக்கு நறைக்கூந்தற்
பிடியே வருக முழு ஞானப்
பெருக்கே வருக பிறைமௌலிப்
பெம்மான் முக்கட் சுடர்க்கிடுதல்
விருந்தே வருக மும்முதற்கும்
வித்தே வருக வித்தின்றி
விளைந்த பரமானந் தத்தின்
விளைவே வருக பழமறையின்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

குருந்தே வருக அருள்பழுத்த
கொம்பே வருக திருக்கடைக்கண்
கொழித்த கருணைப் பெருவெள்ளம்
குடைவார் பிறவிப் பெரும்பிணிக்கோர்
மருந்தே வருக பசுங்குதலை
மழலைக் கிளியே வருகவே
மலையத் துவசன் பெற்ற பெரு
வாழ்வே வருக வருகவே!

| | | | | |
|---|---|---|---|---|
| சக்தி | ஓம், | ஜய | சக்தி | ஓம், சிவ |
| சக்தி | ஓம், | தவ | சக்தி | ஓம்; |
| சக்தி | ஓம், | நவ | சக்தி | ஓம், விஸ்வ |
| சக்தி | ஓம், | சுத்த | சக்தி | ஓம்! (சக்தி) |

| | | | |
|---|---|---|---|
| மூல | குண்டலி | சக்தி | ஓம், ஜகன் |
| மோக | ஸம்ருத | சக்தி | ஓம்; |
| நீல | கண்டித | சக்தி | ஓம், சத்ய |
| நித்ய | தத்துவ | சக்தி | ஓம்! (சக்தி) |

| | | | |
|---|---|---|---|
| வீர்ய, | தார்மிக | சக்தி | ஓம், ஜய |
| விஜய | சாத்விக | சக்தி | ஓம்; |
| கார்ய | காரண | சக்தி | ஓம், சிவ |
| காந்த | சாந்தநற் | சக்தி | ஓம்! (சக்தி) |

| | | | |
|---|---|---|---|
| துஷ்ட | நிக்ரக | சக்தி | ஓம், சுயஞ் |
| சோதி | மாதவ | சக்தி | ஓம்; |
| சிஷ்ட | ரட்சக | சக்தி | ஓம், ஜய |
| சியாம | சுந்தர | சக்தி | ஓம்; (சக்தி) |

| | | | |
|---|---|---|---|
| பொங்கு | மங்கள | சக்தி | ஓம், பரி |
| பூர்ண | ஞானசிற் | சக்தி | ஓம்; |
| தங்கும் | ஐந்தொழிற் | சக்தி | ஓம், ஜீவ |
| சர்வ | தாரக | சக்தி | ஓம்! (சக்தி) |

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# இலக்குமி துதி

செங்கமலப் பொலந்தாதிற் றிகழ்ந்தொளிக்கும்
எழின்மேனித் திருவே வேலே
அங்கனுல கிருள்துரக்கும் அலர்கதிராய்
வெண்மதியாய் அமரர்க் கூட்டும்
பொங்கழலாய் உலகளிக்கும் பூங்கொடியே
நெடுங்கானிற் பொருப்பின் மண்ணில்
எங்குளை நீ அவணன்றோ மல்லல் வளஞ்
சிறந்தோங்கி இருப்ப தம்மா!

பொருளற்றவர்க்கிவ் வுலகில்லை என்றிப் புவிபுகழும்
தெருளுற்ற ஞானிஅப் பொய்யா மொழியில் தெரிந்துரைத்
தான்
மருளுற்ற மாந்தரும் வற்றாத செல்வம் இவ்வையகத்துன்
அருளுற்ற தாலடைவரோ? செந்தாமரை ஆண்டவளே!

உன்னையன்றி இன்பமுண்டோ உலகமிசை வேறே
பொன்னை வடிவென்றுடையாய் புத்தமுதே திருவே
மின்னொளி தருநன்மணிகள் மேடையுயர்ந்த மாளிகைகள்
வன்னமுடைய தாமரைப்பூ மணிக்குளமுள்ள சோலைகளும்
அன்னம் நறுநெய் பாலும் அதிசயமாய்த் தருவாய்
நின்னருளை வாழ்த்தி என்றும் நிலைத்திருப்பேன் திருவே!

கார்கொண்ட மேனிக் கரங்கொண்ட நேமியங்
கடவுளும் புத்தேளிருங்
கால்கொண்டு பணிநாணி கைக்கொண்டு மந்தரக்
கற்கொண்டு கடையுமெல்லை
ஏர்கொண்ட வாரிதி யிடங்கொண் டெழுந்தநல்
லெழில்கொண்ட பொன்னன்னமே
எண்கொண்ட பலகோடி யுயிர்கள்யா வையுந்தந்தும்
இளமைகொண் டிடுமன்னையே

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

பேர்கொண்ட கலியெனும் பேய்கொண்டு நாடொறும்
பெரிதுமச் சுறவுகொண்ட
பிள்ளைபா லின்னமும் தயைகொண் டிடாயெனிற்
பேரருட் கழகாகுமோ?
சீர்கொண்ட நன்னிதிச் செல்வியே யுன்னுடைய
திருவருள் கொடுத்தாளுவாய்
செங்கணெடு மாலுரமு மன்பரக முங்குடிகொள்
செம்பதும மலர்வல்லியே!

கண்டென்றும் இனியமுக் கனியென்று பாலென்று
கழையென்றும் இன்னமுதே
காணென்று மொழிமொழிக் கன்னியே யுன்னுடைய
கமலசெஞ் சரணமின்றி
உண்டென் றிருப்பதினி யொன்றில்லை யுலகெலா
மொன்ருகி யன்ருகியே
உருவாகி யருவாகி யொளியாகி வெளியான
வுலவாத சுகவாரியே
வண்டென்று வேலென்று வாளென் றுரைக்குமிரு
வாரீச நயனமங்காய்
வாதொன்று மிடியொன்று மாய்வுண்டு போகநீ
வாவென் றெனைக்கூவநான்
தெண்டன் புரிந்தென்று சிந்தைநோய் தீருவேன்
செப்புவா யப்பிலுறையுஞ்
செங்கணெடு மாலுரமு மன்பரக முங்குடிகொள்
செம்பதும மலர்வல்லியே.

---

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# சரஸ்வதி வணக்கம்

## புராணம்

தாவறு மூலமெலாந் தந்த நான்முகத்
தேவுதன் றுணைவியாய்ச் செறிந்த பல்லுயிர்
நாவுதொ றிருந்திடு நலங்கொள் வாணிதன்
பூவடி முடிமிசைப் புனைந்து போற்றுவாம்.

## சகலகலாவல்லிமாலை

வெண்டா மரைக்கன்றி நின்பதந்
தாங்கவென் வெள்ளையுள்ளத்
தண்டாமரைக்குத் தகாதுகொ
லோசக மேழுமளித்
துண்டா னுறங்க வொழித்தான் பித்
தாகவுண் டாக்கும் வண்ணம்
கண்டான் சுவைகொள் கரும்பே
சகல கலா வல்லியே.

நாடும் பொருட்சுவை சொற்சுவை
தோய்தர நாற்கவியும்
பாடும் பணியிற் பணித்தருள்
வாய்பங்க யாசனத்திற்
கூடும் பசும் பொற் கொடியே
கனதனக் குன்றுமைம்பாற்
காடுஞ் சுமக்குங் கரும்பே
சகல கலாவல்லியே.

அளிக்குஞ் செழுந்தமிழ்த் தெள்ளமு
தார்த்துன் னருட் கடலிற்
குளிக்கும் படிக்கென்று கூடுங்கொ
லோவுளங் கொண்டு தெள்ளித்
தெளிக்கும் பனுவற் புலவோர்
கவிமழை சிந்தக் கண்டு
களிக்குங் கலாப மயிலே
சகல கலாவல்லியே.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

தூக்கும் பனுவற்றுறை தோய்ந்த
கல்வியுஞ் சொற்சுவை தோய்
வாக்கும் பெருகப் பணித்தருள்
வாய்வட நூற்கடலும்
தேக்குஞ் செழுந்தமிழ்ச் செல்வமுந்
தொண்டர்செந் நாவினின்று
காக்குங் கருணைக் கடலே
சகல கலாவல்லியே.

பஞ்சப் பிதந்தரு செய்யபொற்
பாதபங் கேருகமென்
னெஞ்சத் தடத்தல ராததென்
னேநெடுந் தாட்கமலத்
தஞ்சத் துவச முயர்த்தோன் செந்
நாவு மகமும் வெள்ளைக்
கஞ்சத் தவிசொத் திருந்தாய்
சகல கலாவல்லியே.

பண்ணும் பரதமுங் கல்வியுந்
தீஞ்சொற் பனுவலும் யான்
எண்ணும் பொழுதெளி தெய்தநல்
காயெழு தாமறையும்
விண்ணும் புவியும் புனலுங்
கனலும்வெங் காலுமன்பர்
கண்ணுங் கருத்து நிறைந்தாய்
சகல கலாவல்லியே.

பாட்டும் பொருளும் பொருளாற்
பொருந்தும் பயனுமென்பாற்
கூட்டும் படிநின் கடைக்கணல்
காயுளங் கொண்டு தொண்டர்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

நீட்டுங் கலைத்தமிழ்த் தீம்பா
லமுதந் தெளிக்கும் வண்ணங்
காட்டும்வெள் ளோதிமப் பேடே
சகல கலாவல்லியே.

சொல்விற் பனமு மவதான
முங்கவி சொல்லவல்ல
நல்வித்தை யுந்தந் தடிமைகொள்
வாய்நளி ஞசனஞ் சேர்
செல்விக் கரிதென் றெருகால
முஞ்சிதை யாமை நல்குங்
கல்விப் பெருஞ்செல்வப் பேறே
சகல கலாவல்லியே.

சொற்கும் பொருட்கு முயிராமெய்ஞ்
ஞானத்தின் றோற்றமென்ன
நிற்கின்ற நின்னை நினைப்பவர்
யார்நிலந் தோய்புழைக்கை
நற்குஞ் சரத்தின் பிடியோ
டரசன்ன நாணநடை
கற்கும் பதாம்புயத் தாயே
சகல கலாவல்லியே.

மண்கண்ட வெண்குடைக் கீழாக
மேற்பட்ட மன்னருமென்
பண்கண் டளவிற் பணியச்செய்
வாய்படைப் போன்முதலாம்
விண்கண்ட தெய்வம்பல் கோடியுண்
டேனும் விளம்பிலுன்போற்
கண்கண்ட தெய்வ முளதோ
சகல கலாவல்லியே.

---

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# சரஸ்வதி யந்தாதி

## காப்பு

ஆய கலைக ளறுபத்து நான்கினையு
மேய உணர்விக்கு மென்னம்மை — தூய
வுருப்பளிங்கு போல்வாளென் னுள்ளத்தி னுள்ளே
யிருப்பளிங்கு வாரா திடர்.

படிக நிறமும் பவளச்செவ் வாயுங்
கடிகமழ்பூந் தாமரைபோற் கையும் — துடியிடையும்
அல்லும் பகலு மனவரத முந்துதித்தாற்
கல்லுஞ் சொல்லாதோ கவி.

## கட்டளைக்கலித்துறை

சீர்தந்த வெள்ளிதழ்ப் பூங்கம லாசனத் தேவிசெஞ்சொற்
றூர்தந்த வென்மனத் தாமரை யாட்டி சரோருகமேற்
பார்தந்த நாதனிசை தந்த வாரணப் பங்கையத்தாள்
வார்தந்த சோதியம் போருகத் தாளை வணங்குதுமே.

உரைப்பா ருரைக்குங் கலைக்கெல் லாமெண்ணி லுன்னை யன்றித்
தரைப்பா லொருவர் தரவல ரோதண் டரளமுலை
வரைப்பா லமுதந் திங்கெனை வாழ்வித்த மாமயிலே
விரைப்பா சடைமலர் வெண்டா மரைப்பதி மெல்லியளே.

பாதாம் புயத்திற் பணிவார் தமக்குப் பலகலையும்
வேதாந்த முத்தியுந் தந்தருள் பாரதி வெள்ளிதழ்ப்பூஞ்
சீதாம் புயத்தி லிருப்பா ளிருப்பவென் சிந்தையுள்ளே
யேதாம் புவியிற் பெறலரி தாவ தெனக்கினியே.

தேவருந் தெய்வப் பெருமானு நான்மறை செப்புகின்ற
மூவருந் தானவ ராகியுள் ளோரு முனிவரரும்
யாவரு மேனைய வெல்லா வுயிரு மிதழ்வெளுத்த
பூவரு மாதி னருள்கொண்டு ஞானம் புரிகின்றதே.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

வைக்கும் பொருளுமில் வாழ்க்கைப் பொருளுமற் றெப் பொருளும்
பொய்க்கும் பொருளன்றி நீடும் பொருளல்ல பூதலத்தின்
மெய்க்கும் பொருளு மழியாப் பொருளும் விழுப்பொருளு
முய்க்கும் பொருளுங் கலைமா னுணர்த்து முரைப்பொருளே.

இலங்குந் திருமுக மெய்யிற் புளக மெழுங்கண்கணீர்
மலங்கும் பழுதற்ற வாக்கும் பலிக்கு மனமிக்வே
துலங்கு முறுவல் செயக்களி கூருஞ் சுழல்புனல்போற்
கலங்கும் பொழுது தெளியுஞ்சொன் மானைக்கருதினர்க்கே.

வேதமும் வேதத்தி னந்தமு மந்தத்தின் மெய்ப்பொருளாம்
பேதமும் பேதத்தின் மார்க்கமு மார்க்கப் பிணக்கறுக்கும்
போதமும் போத வுருவாகி யெங்கும் பொதிந்தலிந்து
நாதமு நாதவண் டார்க்கும்வெண் டாமரை நாயகியே.

நாயக மான மலரக மாவது ஞானவின்பச்
சேயக மான மலரக மாவதுந் தீவினையா
லேயக மாறி விடுமக மாவது மெவ்வுயிர்க்குந்
தாயக மாவதுந் தாதார் சுவேத சரோருகமே.

தனக்கே துணிபொரு ளென்னுந்தொல் வேதஞ் சதுர் முகத்தோ
னெனக்கே சமைந்த வபிடேக மென்னு மிமையவர்தா
மனக்கேத மாற்று மருந்தென்ப சூடு மலரென்பன்யான்
கனக்கேச பந்திக் கலைமங்கை பாத கமலங்களே.

பெருந்திரு வுஞ்சய மங்கையு மாகியென் பேதை நெஞ்சி
லிருந்தரு ளுஞ்செஞ்சொல் வஞ்சியைப் போற்றினெல் லாவுயிர்க்கும்
பொருந்திய ஞானந் தருமின்ப வேதப் பொருளுந் தரும்
திருந்திய செல்வந் தருமழி யாப்பெருஞ் சீர்தருமே.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# கலைமகள் புகழ்

வெள்ளைத் தாமரைப் பூவில் இருப்பாள்
வீணை செய்யும் ஒலியி லிருப்பாள்
கொள்ளை யின்பங் குலவு கவிதை
கூறுபா வலர் உள்ளத் திருப்பாள்
உள்ளதாம் பொருள் தேடியுணர்ந்தே
ஓதும் வேதத்தின் உள்நின்றொளிர்வாள்
கள்ள மற்ற முனிவர்கள் கூறுங்
கருணை வாசகத் துட்பொரு ளாவாள்.

மாதர் தீங்குரற் பாட்டிலிருப்பாள்
மக்கள் பேசும் மழலையி லுள்ளாள்
கீதம் பாடுங் குயிலின் குரலைக்
கிளியின் நாவை இருப்பிடங் கொண்டாள்
கோதகன்ற தொழிலுடைத் தாகிக்
குலவு சித்திரங் கோபுரங் கோயில்
ஈதனைத்தின் எழிலிடை யுற்றாள்
இன்பமே வடிவாகிடப் பெற்றாள்.

வஞ்சமற்ற தொழில் புரிந்துண்டு
வாழும் மாந்தர் குலதெய்வ மாவாள்
வெஞ்சமர்க் குயிராகிய கொல்லர்
வித்தை யோர்ந்திடு சிற்பியர் தச்சர்
மிஞ்ச நற்பொருள் வாணிகஞ் செய்வோர்
வீரமன்னர் பின் வேதியர் யாரும்
தஞ்சமென்று வணங்கிடுந் தெய்வம்
தரணி மீதறி வாகிய தெய்வம்.

தெய்வம் யாவும் உணர்ந்திடுந் தெய்வம்
தீமை காட்டி விலக்கிடுந் தெய்வம்
உய்வமென்ற கருத்துடை யோர்கள்
உயிரினுக் குயிராகிய தெய்வம்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

செய்வ மென்றொரு செய்கை யெடுப்போர்
      செம்மை நாடிப் பணிந்திடுந் தெய்வம்
கை வருந்தி உழைப்பவர் தெய்வம்
      கவிஞர் தெய்வங் கடவுளர் தெய்வம்,

செந்தமிழ் மணி நாட்டிடையுள்ளீர்
      சேர்ந்தித் தேவை வணங்குவம் வாரீர்
வந்தனம் இவட்கே செய்வதென்றால்
      வாழி யஃதிங் கெளிதன்று கண்டீர்
மந்திரத்தை முணுமுணுத் தேட்டை
      வரிசையாக அடுக்கி அதன்மேல்
சந்தனத்தை மலரை இடுவோர்
      சாத்திரம் இவள் பூசனை யன்றாம்.

இன்னறுங்கனிச் சோலைகள் செய்தல்
      இனிய நீர்த்தண் சுனைகள் இயற்றல்
அன்ன சத்திரம் ஆயிரம் வைத்தல்
      ஆலயம் பதினாயிரம் நாட்டல்
பின்னருள்ள தருமங்கள் யாவும்
      பெயர் விளங்கி யொளிர நிறுத்தல்
அன்னயாவினும் புண்ணியம் கோடி
      ஆங்கோர் ஏழைக் கெழுத்தறிவித்தல்

நிதி மிகுந்தவர் பொற்குவை தாரீர்
      நிதி குறைந்தவர் காசுகள் தாரீர்
அதுவுமற்றவர் வாய்ச்சொல் அருளீர்
      ஆண்மையாளர் உழைப்பினை நல்கீர்
மதுரத் தேமொழி மாதர்களெல்லாம்
      வாணி பூசைக் குரியன பேசீர்
எதுவும் நல்கியிங் கெவ்வகை யானும்
      இப்பெருந்தொழில் நாட்டுவம் வாரீர்!

---

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org